# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2055 • செப்டம்பர் 7, 2024

Weekly E-paper • September 7, 2024




# “பரம்பொருளை”க் காணவில்லை!

சுப. வீரபாண்டியன்

## இயக்கச் செய்திகள்

## விநாயகர் சதுர்த்தி

தலையங்கம்

## ஊர் சுற்றுகிறார் பிரதமர் உளறிக் கொட்டுகிறார் ஆளுநர்!

சாரதாதேவி

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2055 ● செப்டம்பர் 7, 2024 Weekly E-paper ● September 7, 2024


## "பரம்பொருளை"க் காணவில்லை!

**சுப. வீரபாண்டியன்**



*திருப்பூரில் பரம்பொருள் பவுண்டேஷன் என்று ஒரு அமைப்பு நடக்கிறதாம். அங்கு போய்ச் சேர்ந்தால் பரம்பொருளைப் பார்த்து விடலாமாம்! "Point to point service " மாதிரி போல் இருக்கிறது! இடைநில்லா பேருந்து மாதிரி இவர்கள் நேரடியாகப் பரம்பொருளிடம் கொண்டு போய்ச் சேர்த்து விடுவார்களாம்!*

அந்த மோசடிக் கம்பெனியை நடத்தும் மகாவிஷ்ணு என்னும் ஒருவர் (அடுத்த நித்தியானந்தா போலிருக்கிறது) சென்னையில் உள்ள சைதை, அசோக் நகர் அரசு பள்ளிகளில் உரையாற்றி இருக்கிறார். பாவம், புண்ணியம், மோட்சம், ஆன்மா பற்றி எல்லாம் பேசி இருக்கிறார். அது பிள்ளைகளை ஊக்குவிக்கும் உரையாம் (motivational speech).

இடையில் குறுக்கிட்டுப் பேசிய மாற்றுத்திறனாளியான தமிழாசிரியர் சங்கர் என்பவரைப் பார்த்து, "எப்படிப் பேச வேண்டும் என்று நீங்கள் கற்றுக் கொள்ள வேண்டும் " என்று அந்த 'மாமேதை மகாவிஷ்ணு' கூறியிருக்கிறார். எவ்வளவு திமிர் பாருங்கள்!



பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் அவர்கள் அந்தப் பள்ளிக்கே சென்று, அந்த ஆசிரியரை அழைத்து மேடையில் தன் அருகில் அமர வைத்துப் பாராட்டியதுடன், மகா விஷ்ணுவைப் பேச அனுமதித்த தலைமை ஆசிரியர்கள் இருவரையும் இட மாற்றம் செய்திருக்கிறார்!

அமைச்சரின் செயல் பாராட்டுக்குரியது அதே நேரத்தில், அந்த அனுமதியைக் கொடுத்த அதிகாரியைக் கண்டுபிடித்து அவர் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இடமாற்றம் என்பது போதுமானதன்று..... இடை நீக்கம் (suspension) செய்து துறை சார்ந்த விசாரணை நடத்த வேண்டும்!

இப்போது அந்தப் பரம்பொருளைத் தேடிக் காவல்துறை திருப்பூருக்குச் சென்று இருக்கிறது. ஆனால் அந்த மகாவிஷ்ணுவோ தலைமறைவாகி விட்டாராம்! ஆக மொத்தம், இப்போது பரம்பொருளையே காணவில்லை!

இதுபோன்ற மோசடிக் கும்பல்களின் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதுடன், மக்களிடமும், மாணவர்களிடமும் அறிவியல் சிந்தனைகளை, பகுத்தறிவுக் கருத்துகளைப் பரப்பி விழிப்புணர்வை உண்டாக்க வேண்டிய கடமை, அரசுக்கும் நமக்கும் இருக்கிறது! ●

# கோவையில் பேரவை நிகழ்வுகள்

## அனிதா நினைவேந்தல் – ஆவாரம்பாளையம்




## திராவிட நட்புக்கழகம் – அரசியல் பயிலரங்கம்




## ‘என்றும் தமிழர் தலைவர்’ நூல் அறிமுகம்








மாணவர் பயிலரங்கு, நட்புக்கழக உரையாடல், அனிதா படத்திறப்பு, நூல் அறிமுக விழா என 31-08-2024 மற்றும் 01-09-2024 இரண்டு நாள்களில் கோவை மாவட்ட நிகழ்வுகளில் பேரவைத் தலைவர் சுப. வீரபாண்டியன், பொதுச் செயலாளர் சிற்பி செல்வராஜ், துணைத் தலைவர்கள் பொள்ளாச்சி மா. உமாபதி, ஆ.சிங்கராயர், நட்புக் கழகப் பொதுச் செயலாளர் தோழர் அசன் முகம்மது,மேனாள் சட்டமன்ற உறுப்பினர் கோவை நா.கார்த்திக், ‘புதிய குரல்’ ஓவியா, புதுவை தீனா, இந்து நாளிதழ் ஆசிரியர் வெ.சந்திர மோகன், திராவிட மாணவர் பேரவையின் மாநில அமைப்பாளர் பேராசிரியார் நெல்லை பாபு, திராவிடப் பள்ளிப் பொறுப்பாளர் தோழர் வெற்றிச்செல்வன் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

## தென்காசி பொறுப்பாளர்கள் நியமனம்

### இளைஞர் அணி

**தலைவர்:** இ.எட்வின் தர்மராஜ்,
**செயலாளர்:** S.கதிர்
**துணைச் செயலாளர்கள்:** S.மர்காஷிஸ், ஜ.ரபீக் ராஜா.

### திராவிட மாணவர் பேரவை

**அமைப்பாளர்:** மோ. ரூபஸ்,
**துணை அமைப்பாளர்கள் :**
சீ. டாரிஸ்ஜிந்தகி,
ஜோ.சுஜய்,
து.கவின்,
கா.சுபாஷ் சந்திர போஸ்.

### ஒன்றிய செயலாளர்கள்

**செங்கோட்டை:** H.லெனின், சாமுவேல்.
**வாசுதேவநல்லூர்:** K.முத்துகருப்பன்.
**சங்கரன்கோவில்:** S.அருணகிரி
**ஆலங்குளம்:** ஆ.சுந்தரமூர்த்தி.

### நகரச் செயலாளர்கள்

**சுரண்டை:** சூ.தங்கப்பெப்பின்சன்
**புளியங்குடி:** சி.முப்புடாதி

### பேரூர் செயலாளர்கள்:

வாசுதேவநல்லூர்: போ.கணேஷ், கண்ணன்,
சிவகிரி: ராஜதுரை.
சாம்பவர் வடகரை: காராசி மரைக்காயர்.

**-சிற்பி செல்வராஜ்**
*(பேரவைப் பொதுச் செயலாளர்)*

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

கருஞ்சட்டைத் தமிழர்

## விநாயகர் சதுர்த்தி

புதுக்கோட்டை, பெரம்பலூர் முதன்மைக் கல்வி அலுவலகத்தில் இருந்து அந்தந்த மாவட்டங்களின் பள்ளிகளுக்கு விநாயகர் சதுர்த்தி விழாவை மகிழ்ச்சியுடன், உறுதி மொழியுடன் கொண்டாட வேண்டுமென்று சுற்றிக்கைகள் அனுப்பப் பட்டுள்ளன.

விநாயகர் சதுர்த்தி என்றால், விநாயகர் பிறந்தநாள் என்று பொருள். அது 7ஆம் தேதி என்றால், பிறந்த மாதம்-வருடம் ஏன் சொல்லப் படவில்லை.

சங்க இலக்கியங்களில் விநாயகர் என்ற பெயரே இல்லை. முருகனின் அண்ணன் விநாயகன் என்றால் அந்த வரலாறு ஏன் 'திருமுருகாற்றுப்படை' யில் காணப்படவில்லை.

தமிழ்நாடு அரசுப் பள்ளிகளில் மதம் தொடர்பான விழாக்கள் கொண்டாடப் படுவது இல்லை.

விநாயகரை மத அரசியலாக்கினார் திலகர். அதன் தொடர்ச்சி கலவரமாக, வன்முறையாக மாற வழிவகுக்கப் பட்டுவிட்டது.

இதன் வேர் ஆர்எஸ்எஸ் இல் இருக்கிறது. ஒன்றிய அரசு, அரசுப் பணியாளர்கள் ஆர்எஸ்எஸ் இல் உறுப்பினர் ஆகலாம் என்று சொல்லியது. எதிர்ப்பின் காரணமாக அதைத் திரும்பப் பெற்றது. இதே திட்டத்தை இன்று ராஜஸ்தான் அரசு ஏற்றுக்கொண்டு உள்ளது.

கடந்த ஆட்சிகளின் போது தமிழ்நாடு அரசு அலுவலகங்களில் ஆர்எஸ்எஸ் காரர்கள் நுழைக்கப் பட்டுள்ளனர் என்ற விமர்சனம் இங்கு மேலோங்கி இருந்தன என்பதும் கருதத் தக்கது.

சுற்றறிக்கை அனுப்பிய இரு மாவட்டக் கல்வி முதன்மை அலுவர்கள் மீது அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திராவிட மாடல் ஆட்சியில் மதத்திற்கு இடம் வேண்டாம்.

விநாயகர் சதுர்த்தியும் மதத்தின் ஒரு கூறுதான்.

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்
உதவி ஆசிரியர்கள்:
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை– 600 024,
தொலைபேசி: 044-2472 6408

## தென்காசி பேரவை அமைப்புக் கூட்டம்



பேரவையின் தென்காசி மாவட்ட அமைப்புக் கூட்டம் 31-08-2024 அன்று நடைபெற்றது. இதில் பேரவையின் துணை பொதுச் செயலாளர் தோழர் இராம.வைரமுத்து, அமைப்புச் செயலாளர் ப.புலேந்திரன், மாவட்ட தலைவர் தோழர் சேக்கிழார், மாவட்டத் துணைச் செயலாளர் தோழர் பரசுராமன், மாவட்டப் பொருளாளர் தோழர் கிப்ட்ஸன், நகர, ஒன்றிய, பேரூர் செயலாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# ஊர் சுற்றுகிறார் பிரதமர் உளறிக் கொட்டுகிறார் ஆளுநர்!

**சாரதாதேவி**

மூன்றாவது முறையாகப் பிரதமர் பதவி ஏற்றதுதான் தாமதம், ஊர் சுற்றக் கிளம்பிவிட்டார் நரேந்திரர். தோற்றுப்போக இருந்த தேர்தலை, தேர்தல் ஆணையர்களைக் கைக்குள் வைத்துக் கொண்டு வெற்றி அறிவிப்புகளாக மாற்றியதற்கு, ஆளும் கட்சியின் இருக்கைகளில் இறுக்கத்துடன் அமர்ந்திருந்த அந்த உறுப்பினர்களே சான்று! எதிர்க் கட்சி வரிசையில் அமர்ந்திருந்தவர்கள் ஆரவாரத்துடன் தங்கள் பேச்சுகளை வைக்க வைக்க, எதிரே வாட்டத்துடன் இருந்தனர் பா.ஜ.க வினர்.

எந்த நேரம் வழக்கு போடுவார்களோ, என்ன நிகழுமோ, எத்தனை பேர் பதவி பறிபோகுமோ என்ற அச்சம் காரணமாக இருக்கலாம். ஏறக்குறைய 70 இடங்களில் வெற்றி தங்களிடமிருந்து பறிக்கப்பட்டதை சமூகச் செயல்பாட்டாளரும், வழக்கறிஞரும் ஆகிய டீஸ்டா செடல்வாத் அவர்களுடைய குழுவினர் கண்டுபிடித்து உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தும்கூட, அதை மக்கள் பிரச்சினையாக மாற்ற இ.ந்.தி.யா கூட்டணியினர் ஏனோ முனைப்புப் காட்டவில்லை. உச்ச நீதிமன்றமும் இனி ஒன்றும் செய்வதற்கில்லை எனக்கை விரித்துவிட்டது. பிரதமர் தொகுதியிலேயே மூன்று சுற்றுவரை தோல்வி முகம்தான்!

பதவி ஏற்புப் படலம் முடிந்த கையோடு, நிதிநிலை அறிக்கைக் கூட்டத்தொடரும் தொடர, கடந்த 20 ஆண்டுகளில் மிக அதிகமான 281 மணி நேரங்கள் வேலை செய்துவிட்டதாம் மக்களவை! திரிணாமூல் காங்கிரஸ் கட்சியின் மஹுவா மொய்த்ரா பேச எழுந்தவுடனே எழுந்து அலறி அடித்து அவையை விட்டே ஓடிவிட்டார் பிரதமர். இவ்வளவு மன அழுத்தம் கொடுத்தால் என்னதான் செய்வார் பிரதமர்? கிளம்பிவிட்டார்.

2014இல் பூடானில் தொடங்கிய அவருடைய ஊர் சுற்றல், இதுவரை 79 வெளிநாட்டுப் பயணங்களாக, 70 நாடுகளுக்கு நீண்டு இருக்கிறது. தேர்தலுக்குப் பிறகு இதோ ருசியா, ஆஸ்ட்ரியா, போலந்து, உக்ரைன், புரூனே மற்றும் சிங்கப்பூர் என அவருடைய ஊர் சுற்றல் மீண்டும் தொடங்கிவிட்டது.

2018இல் மாநிலங்களவையில் வெளியுறவுத் துறை இணை அமைச்சர் வி.கே. சிங் அவர்கள், 2014 முதல் 2018 வரையிலான பிரதமரின் வெளிநாட்டுப் பயணச் செலவு ரூ.2021 கோடிகள் எனத் தெரிவித்துள்ளார். 4 ஆண்டுகளில் அவ்வளவு என்றால், அதன் பிறகு 6 ஆண்டுகள் கடந்திருக்கும் இவ்வேளையில் அது ரூ.4000 கோடிகளைக் கடந்திருக்க வேண்டும். நாட்டில் பணம் இல்லை என்று விவசாயிகள், மாணவர்களுக்கு மானியங்கள், உதவித் தொகைகள் நிறுத்தப்படுகின்றன. ஆனால் மோடியின் ஊர்சுற்றலுக்கு மட்டும் தாராளமாகப் பணம் செலவழிக்கப் படுகிறது. ஒளிப்பதிவு மற்றும் ஒப்பனைக் கலைஞர்களுடன் போன மோடியின் பயணங்களால் நாட்டிற்கு எந்த நன்மையாவது, என்ன பயனாவது விளைந்திருக்கிறதா என்றால் எதுவும் இல்லை. ரூபாய் மதிப்பு தேய்ந்து, விலைவாசி உயர்ந்து, வேலை இல்லாத் திண்டாட்டம் அதிகரித்து, நாடு எல்லாக் குறியீடுகளிலும் கிட்டத்தட்ட கடைசி இடங்களுக்கான போட்டியில் தான் இருக்கிறது.

முன்பெல்லாம் அதானியை அழைத்துக் கொண்டுதான் வெளியூர்ப் பயணங்கள் இருக்கும். ஏறக்குறைய எல்லா வணிக வாய்ப்புகளையும் மடைமாற்றி, இந்திய நாட்டின் முதல் பெரும் பணக்காரராக அவரை மாற்றி விட்டதால், இப்போது உலக சமாதானத்திற்கு வழிதேடிப் போகிறாராம் மோடி! குண்டு போடும் ருசிய நாட்டு அதிபரையும் கட்டிபிடித்துக் கொள்வது, அடிபடும் உக்ரைன் நாட்டு அதிபரையும் கட்டிப் பிடித்துக் கொள்வது. கேட்டால் சமாதான நடவடிக்கையாம்! ஒரு கொள்கையோ கோட்பாடோ இல்லை. விழுமியங்களோ, தன்மதிப்போ இல்லை! எல்லாருக்கும் கட்டிப் பிடி வைத்தியம்தான்.

ஒருவர் வெளியூருக்குச்சென்று வீணாக வருகிறார் என்றால், இன்னொருவர் எங்கும் போகாமல் உள்ளூரிலிருந்து கொண்டே தன் வாயாலேயே கெடுக்கும் வேலையைச் செய்துகொண்டு இருக்கிறார். அவர்தான் நம் தமிழ்நாட்டின் ஆளுநர் ஆர்.என்.இரவி! அவர் தன் அலுவலகமான ராஜ்பவனைக் கிட்டத்தட்ட ஆர்.எஸ்.எஸ். ஷாகாவாக மாற்றிக்கொண்டதாகத் தெரிகிறது. அவர் பதவி ஏற்றதிலிருந்தே அவருக்கு இடப்பட்ட கலகக் கட்டளையை செவ்வனே நிறைவேற்றி வருகிறார். வள்ளுவருக்குக் காவி உடை தரித்து, திடீரென்று மே 24 அன்று திருவள்ளுவர் திருநாள் கொண்டாடினார். தனக்குப் பிடித்தவர்களைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர்களாக நியமித்துக் கொண்டு, சனாதனக் கொள்கைகளைக் கல்லூரி மாணவர்களிடமும், பேராசிரியர்களிடமும் விதைத்து வருகிறார். இப்போதும்கூட சென்ற வாரம் பெற்றோர்களிடம், தமிழ்நாடு அரசின் மாநிலக் கல்வித் திட்டம் மிகக் கீழ்த்தரமாக இருப்பதாகக் குறைபட்டுக் கொண்டிருக்கிறார். இஸ்ரோவில் தமிழ் நாட்டில் அரசுப் பாடத்திட்டத்தில் பயின்றவர்களே தலைமை தாங்குகிறார்கள் என்று சொன்னாலும் அவருடைய உளறல் மட்டும் குறையவே மாட்டேன் என்கிறது. குழந்தைத் திருமணம் நல்லது என்று சொன்ன 'மஹா புத்திசாலி' அல்லவா அவர்?

மாற்றித் தொலையுங்கள் என மக்கள் வாக்களித்தும், விடாப்பிடியாக நாற்காலிகளில் ஒட்டிக் கொண்டிருக்கும் இருவருமே நாட்டிற்குத் தேவை இல்லாத ஆணிகள் தான்!

மக்கள் பொறுப்பரா? பொங்குவரா? பொறுத்திருந்து பார்ப்போம்! ●

## திருத்தம்

**'கருஞ்சட்டைத் தமிழர்' 31-08-2024 ஆம் நாள் மின்னிதழ் தலையங்கத்தில் தி.மு.கழக அரசின் மும்மொழிக் கொள்கைதான் தமிழ்நாட்டின் மொழிக் கொள்கை என்று தவறுதலாகப் பதிவாகி இருந்தது. தமிழ்நாட்டின் மொழிக் கொள்கை 'இருமொழிக் கொள்கை என்பதுதான் சரி.**

*- பொறுப்பாசிரியர்.*

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian